வாழ்க்கையும் - மனோதத்துவமும்

OFFICE OF THE REGISTRAR OF BOOKS
3 APR 1951
MADRAS

முல்லை - முத்தையா எழுதியது

ஆசிரியர் நூற்பதிப்புக் கழகம்
53-56, பவழக்காரத் தெரு :: சென்னை 1

முகவுரை

"சகல அபிவிருத்திகளுக்கும், சகல அறவளர்ச்சிக்கும், ஒருவன் தன்னைச் சான்றோன் ஆக்குதலே அடிப்படை" என்றார் சீன தேசத்துத் தத்துவஞானி கன்பூஸியஸ். மன எழுச்சியிலிருந்தே மனிதன் செயல்கள் அனைத்தும் பரிணமிக்கின்றன. அந்த எழுச்சியை நாம் நேரான வழியில் செலுத்தினோமானால் அது நமக்குப் பல வழிகளிலும் நன்மையையே தருகிறது. பிறகு மனப்பண்பு அதிகரிக்கிறது. மனப் பண்பிலிருந்தே அன்பு-தூய்மை-அடக்கம்-சாந்தம்-இரக்கம்-நல்லெண்ணம்-பொறுமை முதலான நற்குணங்கள் நம்மிடம் பிரகாசிக்கின்றன. இவையே சரியான மனோ நிலைமைகளாகும். இந்த நிலைமைகளை விவரிப்பதே மனோதத்துவம் எனப்படும். மேல் நாட்டு மனோதத்துவ நிபுணர்களின் ஆதாரங்களைக் கொண்டு "வாழ்க்கையும் மனோதத்துவமும்" என்ற இந்த நூலைத் தயாரித்திருக்கிறேன்.

மனோதத்துவத்தின் பல கூறுகளுள் ஒன்றான, 'தாழ்வு மனப்பான்மை' என்ற சிறு நூலை முன்பு எழுதினேன். அதைத்தொடர்ந்து இதுவும், இன்னும் பலவும் வெளி வருகின்றன.

இச் சிறு நூலுக்கு, என் வேண்டுதலுக்கிசைந்து, தமது மதிப்பு மிக்க பல அலுவல்களுக்கிடையே, சிரமம் கருதாது வாழ்த்துரை வழங்கிய பேரறிஞர்—ஹைகோர்ட் நீதிபதி கனம் ஏ. எஸ். பி. ஐயர் அவர்களுக்கு என் பணிவோடு கூடிய வணக்கம்.

இந்நூலை, பிரபல பிரசுரகர்த்தர்களான ஆசிரியர் நூற்பதிப்புக் கழகத்தார் அன்புடன் வெளியிடுகிறார்கள். நன்றி!

—முல்லை முத்தையா

சமர்ப்பணம்

"ஊருணி நீர் நிறைந்தற்றே உலகவாம் பேரறிவாளன் திரு"—என்ற வள்ளுவர் வாக்கினை மெய்ப்பித்துக் கல்விக்கென கணக்கற்ற செல்வங்களை வாரி வாரி வழங்கிய வள்ளல்—பிறவிப் பெருங் கொடையாளர்—செட்டி நாட்டின் திலகம், உயர் திரு டாக்டர் அழகப்பச் செட்டியார் அவர்களுக்கு இந்நூலைச் சமர்ப்பிக்கின்றேன்.

—முல்லை-முத்தையா

பொருளடக்கம்

		பக்கம்
1.	மனோதத்துவம் என்றால் என்ன ? ...	1
2.	மனம் என்றால் என்ன ? ...	7
3.	நீங்கள் எப்படி வாழவேண்டும் ?	8
4.	உணர்ச்சிகளை எப்படி பயன்படுத்துவது ? ...	18
5.	மனத்தை அபிவிருத்தி செய்யவேண்டுமா ? ...	27
6.	உள்மனம் என்றால் என்ன ? ...	34
7.	சிறந்த சக்திகளை பயன்படுத்துவது எப்படி ...	40
8.	தெளிவுள்ள கருத்துக்கள் ...	50

40736

வாழ்க்கையும் - - மனோதத்துவமும்

———:o:———

1. மனோதத்துவம் என்றால் என்ன?

மனோதத்துவம் என்பது நம் நாட்டுக்கு மிகவும் பழமையான உண்மை. பண்டைய தமிழ் முனிவர்களான வள்ளுவர், தாயுமானவர், திருமூலர், இராமலிங்கர், பட்டினத்தார், சித்தர்கள் முதலானோர் நூல்களில் இந்த மனோதத்துவ உண்மைகள் விரவிக் கிடக்கின்றன. வசன வடிவிலும் சில தமிழறிஞர்களின் நூல்களில் ஆங்காங்குக் காணலாம்.

எனினும், மேல் நாட்டார் இந்தத் துறையில் இன்று வெகு வேகமாக முன்னேறி யிருக்கிறார்கள். பெரிய பெரிய ஆராய்ச்சிக் கழகங்களை நிறுவி, மனித வாழ்க்கைக்கு ஏற்ற இன்றியமையாத சாதனங்களைக் கண்டு பிடித்து அறிவிக்கின்றனர்.

நம் நாட்டில் மனோதத்துவம் அந்தக் காலத்திலே தோன்றியிருந்தாலும், அவற்றைச் சீராகத் தொகுத்து, புதிய புதிய உண்மைகளைச் சேர்த்துத் தர நம் அறிஞர்கள் முன் வரவில்லை. கம்பர் பெரியவரா? சேக்கிழார் பெரியவரா? சிலப்பதிகாரம் இளங்கோவடிகளால்தான் பாடப் பெற்றதா? திருவள்ளுவர் காலத்திலே தொல்காப்பியர் இருந்தாரா? என்ற ஆராய்ச்சித் துறையிலே ஆர்வமுடன் ஈடுபடும் பேராசிரியர்கள், பண்டைய தத்துவத்தைச் சீர்க்கி உருவாக்க மறந்துவிட்டனர். ஆதலால், இன்று

மேனாட்டிலிருந்து ஒரு புதிய சரக்குப்போல இந்த மனோதத்துவம் இறக்குமதியாகிறது. மனோதத்துவம் என்றால் அதைக் கண்டு யாரும் மிரளவேண்டுவதில்லை. அது நமக்குப் புரியுமா? அல்லது நமக்குத் தேவையா? என்று ஒதுங்க வேண்டாம். ஒரு ஜோசியர், உங்களின் பிறந்த வருஷம், மாதம், தேதி, நக்ஷத்திரம் இவைகளைக் கணக்கிட்டு, கிரகங்களின் நிலை முதலிய ஆராய்ச்சி செய்து உங்களின் கடந்த காலம், நிகழ் காலம், எதிர்காலம் பற்றிய வாழ்க்கைக் குறிப்புகளைக் கூறுகிறார். மற்றொரு விதமாக உள்ளங்கையில் ஓடும் ரேகைக் கோடுகளைப் பார்த்து ரேகை சாஸ்திர நிபுணர், நீங்கள் ஆச்சரியப்படும் வண்ணம் உங்கள் வாழ்க்கையைக் கூறுகிறார். இன்னும் ஒருவர், உங்களைப் பார்த்த மாத்திரத்திலே உங்களைப்பற்றிய செய்திகளை அப்படியே கூறிவிடுவார். இப்படிக் கூறுபவரின் பெயர் நிமித்திகர். வானசாஸ்திரிகள் நக்ஷத்திரக் கணக்குகளைக்கொண்டு அவ்வப்போது வானநிலை முதலியவற்றை அறிவிக்கின்றனர். இப்படிப்பட்ட பல நிபுணர்கள் இருந்திருக்கிறார்கள். இன்றும் இருக்கிறார்கள். மேனாட்டிலும் இந்த வகையில் தேர்ச்சி பெற்ற பலர் உள்ளனர். இவர்களில் தற்காலிகமாக வயிற்றுப்பிழைப்பாகக் கருதி நுனிப்புல் மேய்ந்தவர்கள் பலர் ஏதேதோ அரை குறையாக உளறிவிட்டுப் போவார்கள். அவற்றைப்பற்றி இங்குப் பேச்சில்லை.

இன்றைய விஞ்ஞான சாத்திரங்களுள் மனோதத்துவமும் ஒன்றாகக் கருதப்பட்டு வருகிறது. இந்த மனோதத்துவ ஆராய்ச்சியிலே எத்தனையோ எண்ண வேறுபாடுகள் உண்டு. அவைகளைப்பற்றி அடுத்தடுத்து விளக்கப்படும். ஒருவருடைய தோற்றம், பேச்சு, நடத்தை, எண்ணம், செயல், அறிவு முதலான நடவடிக்கைகளைக்